575

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல், 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1 வினாக்கள் விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

துணை வட்டங்களை வட்டங்களாக உயர்த்தல்.

குறுகிய கால வினா எண். 56—திரு. இரா. அமிர்தராஜ் திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) நடப்பாண்டில், தமிழகத்தில் உள்ள துணை வட்டங்களில் எத்தனை முழு அளவு வட்டங்களாக உயர்த்தப்படும்?

ஆ) புதிதாக உருவாகும் வட்டங்களின் எல்லைகள் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 29 துணை வட்டங்கள் இருக்கின்றன. அந்த 29-ல், 14 இன்றைக்குத் தனி வட்டங்களாக ஆக்கப் பட்டிருக்கின்றன. தனி வட்டங்களாக ஆக்கப்படும்போது அங்கே இருக்கும் ஜனத்தொகை, பரப்பளவு, பின்தங்கிய பகுதியா என்பதையெல்லாம் பார்த்து வட்டங்களாக ஆக்கப் பட்டிருக்கின்றன.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தனி வட்டங்களாக உயர்த்தப்பட்டதில், சாத்தங் குளமும் தனி வட்டமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஏற்கெனவே திருச்செந்தூர் வட்டத்தோடு இணைந்திருந்த உடன்குடி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களை சாத்தாங்குளத்தோடு இணைத்திருப்பதாகக் கூறப்படுவது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னபடி எந்தெந்த துணை வட்டங்கள் தனி வட்டங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தந்தத் துணை வட்டங்களிலேயே இருக்கும் கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக எந்தக் கிராமமும் எந்த இடத்திலும் கிராமங்கள் சேர்க்கப்படவில்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நல்ல அறிக்கையை அமைச்சர் அவர்கள் தெரிவித்து உள்ளார்கள். அதற்கு என் நன்றி. ஆனால் ஒரே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். தற்போது துணை வட்டங்கள், அப்படியே எந்தவித மாற்றமும் இல்லாமல், தனி வட்டங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு மாறுபட்டு உடன்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகள் சாத்தன்குளத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இல்லை.

திரு. செ. சிவசாமி: 29 துணை வட்டங்களில் 14 துணை வட்டங்கள் தனி வட்டங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டது. கிழக்கு மாவட்டம் பகுதியில் எந்தெந்த தாலூக்காக்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பது சொல்லப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன். திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான கேள்வியைக் கேட்க வேண்டாம். அப்படிக் கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம். நான் ஏற்கெனவே பலமுறை இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்டால் அவரிடம் பதில் இல்லாமல் இருக்கலாம். மொத்தத்தில் எத்தனை துணை வட்டங்கள் தனி வட்டங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பது கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதற்குப் பதில் என்னிடத்தில் இருக்கிறது. நான் பலமுறை ஏற்கெனவே இதற்குப் பதில் கொடுத்திருக்கிறேன். காலத்தை வீணாக்காமல் குறிப்புகளைப் படிக்க வேண்டும் என்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 30]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு வட்டங்கள் பிரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் தாலூக்காவில் 4 லட்சம் மக்கள் கொண்ட பகுதி . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊருக்கு ஊர் பற்றிய கேள்விகளைக் கேட்டு கொண்டு இருக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தக் கேள்வியில் தமிழகம் முழுவதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் அமைச்சர் அவர்களும் தன்னிடத்தில் விவரங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நீங்கள் ஏன் தடை செய்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரங்கள் இருக்கின்றன என்று சொன்னதற்காக ஒவ்வொரு ஊரைப்பற்றியும் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்க அனுமதிக்க முடியாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவர் தான் பதில் இருக்கிறது, சொல்லுகிறேன் என்று சொல்லுகிறாரே........

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கேள்வி நெல்லை மாவட்டத்தைப்பற்றி கேட்டதாகும். நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சிவகிரி இப்போது சப் தாலூகாவாக. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் சம்பந்தம் இல்லாத கேள்வி. அடுத்த கேள்வி—874.

சிறுதொழில்களுக்கு மின்சக்தி வழங்கல்.

* வினா எண். 874—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மாலை 6 மணி முதல் 9 மணி வரையில் உள்ள மின் வெட்டினால் சிறு தொழில்கள் பாதிக்கப்படுவதால் அதை நீக்க வேண்டி அரசிற்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?